ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# ஆரண தேசிகனின் ஆயிரம் அறிவுரைகள்

(ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். ஸோமயாஜி அக்னிஹோத்ரம் நாராயண தாதயார்ய மஹாதேசிக ஸ்வாமியிடம் கேட்டறிந்து தொகுத்தவை)

தொகுப்பு: ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். யஜ்ஞவராஹ தாதயார்ய மஹாதேசிகன், மங்களகிரி

==========================================================================================

## அறிவுரை 41. அபராதமிலாப் பணிகள் செய்.

**கைங்கரியங்களில் அபராதம் புகாதபடி ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.**

देवी-भूषण-हेत्यादि-जुष्टस्य भगवंस्तव ।
नित्यं निरपराधेषु कैंकर्येषु नियुंक्ष्व माम् ।।

தேவீ-பூஷண-ஹேத்யாதி-ஜுஷ்டஸ்ய பகவம்ஸ்தவ ।
நித்யம் நிரபராதேஷு கைங்கர்யேஷு நியுங்க்ஷ்வ மாம் ॥

- ந்யாஸதசகம்

வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம் என்று ஆழ்வார் கூறுவதுபோல் குற்றம் இல்லாத கைங்கரியங்களைப் பண்ணுவது குறித்த இந்த ச்லோகத்தின் அர்த்தம்:

பகவானே! பிராட்டி, திருவாபரணங்கள், திருவாயுதங்கள் இவற்றுடன் கூடிய உனக்கு எப்பொழுதும் குற்றம் கலவாத திருப்பணிகளில் என்னை நியமிக்க வேணும்.

கைங்கரியங்கள் பண்ணுவது எளிதன்று. அதில் எத்தனையோ தோஷங்கள் ஸம்பாவிதங்கள். குற்றங்களுடன் பணிகள் செய்தால் தீங்கு நேரும். அவை நேராதபடி நாம் ஸாவதாநராக இருக்க வேண்டும். அதற்காகப் பெருமாளையே பிரார்த்திக்கிறோம். நம்மாலானதென்ன?

****************